# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 06.02.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இறைவனின் பண்புப் பெயர்களுக்கு ஒரு பெயர் **அல்ஹாதி – நேர்வழி காட்டுபவன்** என்பதாகும். லிஸானுல் அரபி என்ற அரபி அகராதி நூலில் இதன் பொருள் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது தனது நல்லடியாருக்கு தன்னைப் பற்றிய ஞானத்தையும், அடையாளத்தையும் பெருகின்ற வழியைக் காட்டுபவன்; இதன் மூலம் அவனது ருபூபிய்யத்தை ஏற்றுக் கொள்ள வைப்பவன் என்பதாகும். இந்த வழியை அல்லாஹ் எவ்வாறு காட்டுகிறான்; எப்போது காட்டுகிறான் என்றால் அவனது மக்கள் இறைவனுடைய ருபூபிய்யத்தை மறுக்கும்போது காட்டுகிறான். இந்த மறுப்பிற்கும் பல விதங்கள் உண்டு. கிறிஸ்தவர்கள், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை கடவுளாக்கியது போன்று மனிதனை இறைவனாக ஆக்கி விடுதல், மனிதன் தனது சக்திகளை வைத்து தன்னை இறைவன் என்று கூறிவிடுகின்றான். முந்தைய நபிமார்களின் வரலாற்றிலும் இவ்வாறு நடந்துள்ளது. ஃபிர்அவ்ன் தன்னை இறைவன் என்று கூறினான். இக்காலத்திலும் தன்னையே இறைவன் என்று கூறுபவர்கள் இருக்கிறார்கள். அல்லது இறைவன் இவ்வுலகில் மனித உருவில் அவதாரம் எடுத்துள்ளதாக தன்னை வாதிக்கின்றார்கள். மேலும் கபர்களில் சென்று சஜ்தா செய்ய கூறுகின்றார்கள் அல்லது உலகில் சில அரசாங்கங்கள் தன்னை நிலையான சக்தி என்று எண்ணுகிறது. இந்த விதமாக தன்னை **ரப்** என்று கூறுகிறது.

ஆக, உலகில் முடிவடையாத மிக நீண்ட குழப்பம் நிலவும்போது தனது வல்லமையை வெளிப்படுத்துகிறான். மேலும் தானே **ரப்புல் ஆலமீன்** ஆவேன் என்று உலகின் முன் காட்டுகிறான். இதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

அல்லாஹ் **ரப்புல் ஆலமீன்** என்ற தனது கூற்றில், அவனே எல்லாவற்றையும் படைத்தவன் ஆவான். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவன் படைத்ததே ஆகும். மேலும் பூமியில் இறைவனின் நேர்வழியைப் பெற்ற கூட்டமும், தீமை செய்கின்ற வழிகெட்ட கூட்டமும் **ஆலமீன்** என்பதில் அடங்கும். வழிகேடு, நிராகரிப்பு, நயவஞ்சகம், மேலும் வரம்பு மீறுவது அதிகரித்து விடுகின்ற போது பூமி அநீதியால் நிறைந்து விடுகின்றது. மக்கள் இறைவனின் பாதையை கைவிட்டு விடுகின்றனர். மேலும் உபுதிய்யத்தின் உண்மையையும் புரிந்து கொள்வதில்லை. ருபூபிய்யத்தின் உண்மையையும் புரிந்து கொள்வதில்லை. அடியானின் நிலை என்ன? ரப்பின் தகுதி என்ன? என்பதையும் புரிந்து கொள்வதில்லை. ஆக, உலகம் ஒரு இருள் நிறைந்த இரவைப் போன்று ஆகி விடுகிறது. மேலும் மார்க்கம் இந்த முஸீபத்தின் கீழ் மிதிக்கப்படுகிறது. அப்போது ரஹ்மானாகிய இறைவன் புறமிருந்து ஒரு இமாம் வருகிறார். அவர் **ஷய்த்தானிய** படையை எதிர்க்கிறார். **ஷய்த்தானிய** படையும் ரஹ்மானியப் படையுமாகிய இந்த இரண்டு படையும் எதிர்கொள்கிறது. பொய்யின் கழுத்தில் தூக்குக்கயிறு போடப்படுகிறது. இதை ஆன்மீக கண்கள் உடையவர்தான் பார்க்கின்றார். மேலும் பொய்யான கூட்டத்தின் கானல் நீர் போன்ற ஆதாரங்கள் அழிந்து விடுகின்றன. எனவே, இறைவனின் அந்த இமாம் எதிரியின் மீது எப்போதும் வெற்றி பெறுகிறார். மேலும் இறைவனின் நேர்வழியைப் பெற்ற கூட்டத்திற்கு எப்போதும் உதவி புரிகிறார்.

ஆக, நேர்வழியின் பக்கம் கொண்டு வருவதற்காக தனது ருபூபிய்யத் என்ற பண்பை செயல்படுத்துகின்ற இறைவன் இவனே ஆவான்.

ஆனால், அன்னார் கூறியது போன்று வெற்றியின் அடையாளங்கள் எதிரியின் மீது வெளிப்படுகிறது. பிறகு அல்லாஹ் நேர்வழி பெற்ற கூட்டத்திற்கு உதவி புரிகின்றான். மேலும் குழப்பம் விளைவிக்கும் கூட்டத்தின்

வளர்ந்து வருகின்ற சக்தியை நிறுத்தி விடுகின்றான். மேலும் அந்த சக்திகளை பின்வாங்க வைத்து விடுகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் கிறித்தவர்களின் வெற்றி உலகில் எல்லா இடத்திலும் பரவிக் கொண்டிருந்தது. இந்தியாவில் இருந்த முஸ்லிம்களும் கூட்டம் கூட்டமாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இந்தியாவில் கிறிஸ்தவ மார்க்கத்தின் வெற்றியின் கனவை கிறிஸ்தவ மிஷனரிகள் கண்டு கொண்டிருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தியாவில் அவர்களது வளர்ச்சியை தடுத்தது மட்டுமல்லாது கிறிஸ்தவ மிஷினரிகளின் பிடியிலிருந்த ஆப்பிரிக்காவும் அஹ்மதிய்யத் பக்கம் திரும்பியது. இதனால் அங்குள்ள கிறிஸ்தவ மிஷினரிகள் அஹ்மதிய்யத் எங்களது முன்னேற்றத்தை தடுத்தது மட்டுமல்லாது எங்களது பாதத்தையே நிலைகுலைய வைத்து விட்டது என்று கூறினார்கள்.

இவ்வாறு அல்லாஹ் நேர்வழியில் நடத்துவதற்காக தனது ருபூபிய்யத்தின் பண்பை வெளிப்படுத்துகின்றான். மேலும் ஆன்மீக பார்வை உடையவர்கள்தான் அந்த இமாமை அடையாளம் காண்கிறார்கள். பெரிய பெரிய முஸ்லிம் ஆலிம்கள் எங்களுக்கு மார்க்க அறிவு உள்ளது என்று கூறுகின்ற ஆலிம்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிர்ப்பில் குருடர்களாகி அவர்கள் பெற்ற அறிவை தவறான வழியில் செலுத்துகிறார்கள். மேலும் தங்களது இந்த அறிவின் அடிப்படையில் முஸ்லிம் சமுதாயத்தையும் வழிகெடுக்கின்றார்கள். முஸ்லிம்களுக்கிடையில் பல்வேறு பிளவு உருவாகி விட்டது. மார்க்கம் இப்போது பெயரளவில்தான் எஞ்சியுள்ளது என்பதை இந்த ஆலிம்கள் நன்கு அறிவார்கள். மேலும் கிலாஃபத்தின் மீது அழுத்தம் கொடுக்கின்றார்கள். ஆனால், கிலாஃபத்தின் துவக்கம் பற்றி இவர்கள் சிந்திக்கவில்லை. அதாவது மஸீஹ் மற்றும் மஹ்தியின் வருகையை இவர்கள் சிந்திப்பதில்லை. அதற்கு பிறகுதான் கிலாஃபத் உருவாக முடியும். ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் உயிரோடு இருக்கிறார்கள். அவரே மீண்டும் வருவார். பிறகு மஹ்தியோடு இணைந்து மார்க்கம் பரவும் என்று இன்று வரை இவர்கள் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் ஹதீஸ்களை தவறாக புரிந்து கொண்டு தங்கள் சிந்தனையை பின்பற்றுகிறார்கள்.

எதுவரை இவர்கள் நுபுவ்வத்தை ஏற்றுக் கொள்ளவில்லையோ அதுவரை கிலாஃபத் வராது. இதன் விளைவாக இவர்கள் குறை கூறுகின்ற இந்த நிலைதான் நீடிக்கும்.

இந்த உம்மத்திலிருந்து ஒருவரை அல்லாஹ் மஸீஹ் மற்றும் மஹ்தியாக அனுப்புவான் என்பது தொடர்பாக அல்லாஹ் நமக்கு துஆவைக் கற்றுத் தந்துள்ளான். இவ்வாறு துஆவை கற்றுத் தந்த பிறகும் இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் இவர்களை நாம் என்ன கூற முடியும்? அல்லாஹ் கூறுகிறான்: என்னிடம் பணிவோடு துஆ கேளுங்கள். நான் ஏற்றுக் கொள்வேன். இதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

முஹம்மதின் நுபுவ்வத் தனது சொந்த அருளை இழந்துவிடவில்லை. மாறாக, எல்லா நுபுவ்வத்தை விட அதிக அருள் இதில் இருக்கின்றது. இந்த நுபுவ்வத்தைப் பின்பற்றுவது இறைவன் வரை மிகவும் எளிதில் கொண்டு செல்கிறது. மேலும் இந்த நுபுவ்வத்தைப் பின்பற்றுவது இறைவனின் அன்பையும், அவனிடம் உரையாடும் தகுதியையும் பெற்றுத் தருகிறது. மேலும் இறைவனுடனான இந்த உரையாடலின் தகுதி முழுமையான நிலையை அடையும்போது, மேலும் அதில் எவ்வித குறைவும் இல்லாதபோது, மேலும் மறைவானவற்றின் செய்தி அதிகமாக வெளிப்படும்போது இந்த நிலைதான் இன்னொரு வார்த்தையில் நுபுவ்வத் என்று அழைக்கப்படுகிறது.

இறைவனோடு உரையாடுவது அடியான் இறைவனிடமும் இறைவன் அடியானிடமும் பேசுவது மேலும் மறைவானவற்றைப் பற்றிய ஞானம் மிக அதிகமாக வழங்கப்படுதல் இதற்கு இன்னொரு பெயர்தான் நுபுவ்வத் ஆகும். இதன் மீது அனைத்து நபிமார்களின் கருத்தும் ஒருமித்துள்ளது. ஆக, குன்தும் கைர உம்மத்தின் உக்ரிஜத் லின்னாஸி – மக்களு(டைய பயனு)க்காகத் தோற்றுவிக்கப் பெற்ற நீங்கள் (மற்றெல்லாரையும் விடசி)

சிறந்த கூட்டத்தினராவீர்கள்...... (3:111) என்று கூறப்பட்ட சமுதாயம், அது மக்களில் மிகச்சிறந்த உம்மத்தாக இருக்கிறது. இந்த சமுதாயத்திற்கு தான் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் என்ற துஆ கற்றுத் தரப்பட்டுள்ளது. இவ்வாறு சிறந்த சமுதாயத்தின் ஒரு மனிதன் கூட அந்த உயர் தகுதியை அடையவில்லையா? அவ்வாறானால் முஹம்மதிய்ய சமுதாயம் குறையுடைய சமுதாயமாகும். மேலும் அதுமட்டுமல்ல, இந்த சமுதாயத்தின் அனைத்து நபர்களும் குருடர்களாக இருப்பர். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருள் குறையுடைய அருளாகி விடும். மேலும் அன்னாரின் தூய்மைப்படுத்தும் ஆற்றல் குறையுடையதாகி விடும். மேலும் ஐவேளை தொழுகைகளில் ஓத வேண்டும் என்று கற்றுத்தரப்பட்ட துஆவும் அர்த்தமற்றதாகி விடும்.

ஆக, ஒருபுறம் நீங்கள் மக்களின் பலனுக்காக உருவாக்கப்பட்ட சிறந்த உம்மத் ஆவீர்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். மறுபுறம் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் – அல்லாஹ் எப்போதும் நேரான வழியில் நடந்த துஆவும் கற்றுத் தந்துள்ளான். மேலும் தனது அருட்கொடையை வழங்கியவர்களின் பாதையில் வழிநடத்த துஆ கற்றுத் தந்துள்ளான். அந்த அருட்கொடைகள் நுபுவ்வத், ஸித்தீகிய்யத், ஸாலிஹிய்யத் மற்றும் **ஷ**ஹீத் ஆவதாகும். ஆக, இவ்வாறு துஆ செய்ய கற்றுத் தந்தும் கூட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்தில் ஒருவருக்கு கூட நுபுவ்வத் என்ற பதவி கிடைக்காதா? மேலும் அல்லாஹ் அவருக்கு மறைவானவற்றை அறிவித்து அவரிடம் பேசமாட்டானா?

ஆக, இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற இந்த துஆவை தொழுகையில் நாம் பலமுறை ஓதுகிறோம். மேலும் உலகின் மூலை முடுக்குகளில் எங்கெல்லாம் முஸ்லிம் இருக்கின்றாரோ மேலும் தொழுகின்ற ஒவ்வொருவரும் இந்த துஆவை வேண்டுகிறார். ஆனால் இவர்களின் கருத்துப்படி இறைவன் அதை ஏற்றுக் கொள்வதில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நான் பல மக்களிடம் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை செய்யும்படி கூறி இருக்கிறேன். இதன் விளைவாக அல்லாஹ் அவர்களுக்கு சரியான பாதையைக் காட்டியிருக்கிறான்.

எனவே நீங்கள சுயநலத்திலிருந்தும், உங்கள் சிந்தனைகளிலிருந்தும், உங்கள் பகட்டான போக்கை விட்டும் வெளியேறி, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிர்ப்பிலிருந்து உங்கள் சிந்தனையை தூய்மையாக்கி இந்த துஆவை வேண்டினால் அல்லாஹ் நேர்வழியைக் காட்டுவான். இது இறைவனை குறை கூறுவதாகும். அதாவது, ஒருபுறம் என்னிடம் துஆ கேளுங்கள். நான் அதை ஏற்றுக் கொள்வேன் என்று திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான். **வ கால ரப்புகும் உத்ஊனீ அஸ்தஜிப்லகும்** (40:61) அவர்களுடைய **ரப்** கூறுகிறான். நீங்கள் என்னை அழையுங்கள் நான் உங்களுக்கு பதிலளிப்பேன். பௌதீக வி**ஷ**யத்தில் நமக்கு துஆ செய்ததால் இது கிடைத்து விட்டது; அது கிடைத்து விட்டது என்று நாம் அன்றாடம் கூறுகிறோம். ஆனால் மனிதன் தனது ஆன்மீக முன்னேற்றத்திற்காக செய்கின்ற துஆக்களை அல்லாஹ் கேட்கமாட்டானா? மேலும் அல்லாஹ்வே அதை கற்றுக் கொடுத்திருக்கின்றான்.

என்னிடம் உங்களது நேர்வழிக்காக துஆ செய்யுங்கள். மார்க்கத்திற்கு ஒரு நேர்வழி காட்டுபவர் தேவைப்படுகிறார். அல்லாஹ்விற்கு அவனது வாக்குறுதியை நினைவூட்டி துஆ செய்தால் அந்த துஆவை அவன் ஏற்றுக் கொண்டு நேர்வழி காட்டுபவரை அல்லாஹ் அனுப்புகிறான். மற்ற எல்லா துஆக்களையும் நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால், இந்த துஆவை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று அல்லாஹ் கூறுகிறான் என்று சொன்னால் இது அல்லாஹ்வின் மீது சுமத்தப்படுகின்ற பழியாகும். முஸ்லிம் உம்மத்தின் இழிவான அவல நிலை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. எனது உம்மத் மக்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட தலைசிறந்த உம்மத்தாகும். இதன் அவலநிலை நீடித்துக் கொண்டே இருந்தால் இருக்கட்டும்; மார்கமும் ஈமானும் அழிந்துபோனால் அழிந்து போகட்டும். ஆனால் உங்களது மார்க்கத்தில் உங்களை நேர்வழியில் நடத்துகின்ற ஒருவரை நான் ஒருபோதும் அனுப்பமாட்டேன். நீங்கள் துஆ

செய்வதோடு உங்களது மூக்கை தேய்த்துக் கொண்டிருந்தாலும் சரியே. நான் உங்களின் நேர்வழிக்காக எந்த ஏற்பாடும் செய்யமாட்டேன். நேர்வழிக்காக நான் செய்ய வேண்டியது அனைத்தையும் செய்து விட்டேன். இனி நேர்வழிக்கென்று எவரையும் அனுப்பப்போவதில்லை என்று இறைவன் நிச்சயமாக கூறமாட்டான். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவதுபோன்று துஆ செய்து நீங்கள் உங்கள் மூக்கை தேய்த்தாலும் சரி, உங்கள் சந்ததிகள் அழிந்து விடுவர். உங்களின் சந்ததிகளின் சந்ததிகள் அழிந்து விடுவர். என்னைத் தவிர வேறு நேர்வழி காட்டுபவர் வந்தாலும் சரி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் யாரும் வரப்போவதில்லை. வரவிருந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வந்து விட்டார். அவரை ஏற்றுக் கொள்வதை தவிர வேறு வழி இல்லை.

எனவே முஸ்லிம்கள் தங்களது நிலையை நன்கு சிந்திக்க வேண்டும். அஹ்மதிகளின் மீது அநீதியிழைப்பதற்குப் பதிலாக நல்லெண்ணத்துடன் இறைவனிடம் நேர்வழியை வேண்ட வேண்டும். அஹ்மதிகளின் மீது ஒவ்வொரு நாளும் புதிய புதிய அநியாயம் இழைக்கப்படுகிறது. புதிய வழிகளை தேடிக் கொண்டிருக்கின்றார்கள். ஏதேனும் ஒரு வழியைக் கடைபிடித்து அநீதியிழைத்து ஒரு சிலர் அஹ்மதிய்யத்தை விட்டு விட வேண்டும் என்பதற்கு முயற்சிகள் செய்யப்படுகிறது. இதில் ஒவ்வொன்றிலும் அவர்கள் தோல்வியை அடைகின்றனர். இப்போது இதற்காக ஒரு புது வழியை இவர்கள் கையாண்டுள்ளார்கள். கடந்த சில நாட்களில் இவர்கள் இந்த புதிய வழிமுறையைப் பயன்படுத்தியுள்ளீர்கள். அதாவது குழந்தைகளை மிரட்டுவது. பள்ளிகளில் படிக்கும் 14, 15 வயது குழந்தைகள் மீது இந்தப் பழியைச் சுமத்தியுள்ளார்கள். அதாவது அந்த குழந்தைகள் கழிப்பிடமும் இன்னும் சில அசுத்தமான இடங்களிலும் முஹம்மதின் பெயரை எழுதி வைத்தார்கள். இவ்வாறு அந்த குழந்தைகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அவமதித்து விட்டார்கள் என்பதுதான் அந்த பொய்க் குற்றச்சாட்டாகும். இந்த மக்கள் ஆன்மீக பார்வையற்றவர்கள் ஆவர். இவ்வாறு இருந்துகொண்டு அஹ்மதிகளின் மீது குற்றம் சுமத்துகிறார்கள். இவ்வாறான கீழ்த்தரமான செயல்களை இவர்களால்தான் செய்ய முடியும். இவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதி பற்றிய அறிவு கிடையாது. ஆனால் 14, 15 வயதுடைய ஒரு அஹ்மதி குழந்தை கூட இவ்வாறான செயலை ஒருபோதும் செய்யமாட்டார்கள். நமக்கு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதி பற்றி வழங்கியுள்ள போதனையின் பக்கம் இவர்களின் சிந்தனைகூட செல்ல முடியாது. உலகில் எந்த நாட்டில் வசிக்கின்ற முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, அல்லாஹ் அவர்களுக்கு நல்லறிவு வழங்குவானாக. அவர்கள் அஹ்மதிகளை அநீதிக்கு இலக்கு ஆக்குவதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். மேலும் நேர்வழியினைப் பெறுவதற்கு பணிவோடு அல்லாஹ்வின் முன் குனிய வேண்டும்.

இங்கு நான் ஒரு விஷயத்தை விளக்க விரும்புகிறேன். கடந்த சில நாட்களுக்கு முன் லஜ்னாவிற்கு Refresh course நடந்தது. அப்போது ஒருவர் கேள்வி எழுப்பினார். அதாவது நீங்கள் மிர்ஸா சாஹிப் நபி என்று கூறாமல் இருந்தால் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று அஹ்மதி அல்லாதவர்கள் கூறுகிறார்கள்.

முதல் விஷயம் என்னவென்றால், இந்த மக்களின் கூற்றை சில அஹ்மதிகளும் தெரியாமல் ஏற்றுக் கொள்வார்கள் என எண்ணுகின்றனர். இது அவர்களின் நல்லெண்ணமாகும். ஏற்றுக் கொள்பவர்கள் எதையும் ஏற்றுக் கொள்கின்றனர். ஏற்றுக் கொள்ளாதவர்கள் எதைக் கூறினாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்கள் நூல்களில் நபிக்கு இலக்கணம் எழுதியுள்ளதன் அடிப்படையில் அன்னார் தம்மை நபி என்று வாதிட்டார்கள். அல்லாஹ் தனது ஒரு அடியானிடம் அதிகமாக உரையாடினால், மறைவானவற்றை வெளிப்படுத்தினால் இதற்கு பெயர்தான் நுபுவ்வத் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இதையே முந்தைய நபிமார்கள் அனைவரும் கூறினார்கள். இதை (நுபுவ்வத்தை) மறுத்து விட்டால் பிறகு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இல்ஹாம் இறங்கியது என்பதையும் மறுக்க வேண்டியது வரும். பிறகு இன்னும் சில வாதங்களை மறுக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுவார்கள். ஏனென்றால், அசல்

விஷயத்திலிருந்து நாம் ஒருமுறை விலகி பலவீனத்தை வெளிப்படுத்தினால் பிறகு நமது ஈமானும் பலவீனமாகிக் கொண்டே செல்லும். நாம் நமது எண்ணிக்கையை கூட்டுவதற்காக அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த மஸீஹை விட்டு வேறு ஒரு புதிய மஸீஹை நம்ப வேண்டி வரும்.

ஆக நுபுவ்வத்தை மட்டும் கூறாதீர்கள் என்று பல நேரங்களில் நம்மிடம் கூறப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸ் இவ்வாறு வருகிறது.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

ஈசப்னு மர்யமுக்கும், எனக்கும் இடையில் வேறு நபி யாரும் இல்லை. ஹஸ்ரத் ஈஸா மரணமடைந்து விட்டார்கள். இனி அவர்கள் மீண்டும் உலகிற்கு வர முடியாது. மேலும் மஸீஹைப் போன்று ஒருவர் இப்போது இந்த உம்மத்திலிருந்து தான் வருவார் என்று நாம் கூறுகிறோம். ஆனால், ஈஸா நபி வானத்தில் உயிரோடு இருக்கிறார்கள். அவர்தான் மீண்டும் வருவார் என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்த நம்பிக்கைதான் எஞ்சி இருக்கும். மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் வருவார்கள். மேலும் நபியாக இருப்பார்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இன்றும் உயிரோடு வானத்தில் இருக்கிறார்கள் என்பது பொருள் இல்லை. எனவேதான் ஒரு விஷயத்தை மறுத்தால் அதிலிருந்து எல்லாவற்றையும் படிப்படியாக மறுக்க வேண்டியது வரும் என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரவிருந்த மஸீஹ் நபியாகத்தான் வருவார் என்று கூறியுள்ளார்கள். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபி இல்லை என்று கூறினால், பிறகு மஸீஹ் மவ்வூது என்ற வாதத்தை மறுக்க வேண்டியது வரும். ஆக, (ஜமாஅத்தைப் பற்றிய) முழுமையான அறிவு இல்லாத அஹ்மதிகள் இதை நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஒரு கொள்கையை நாம் மறுத்தால் பிறகு படிப்படியாக ஒவ்வொரு வாதத்தையும் மறுக்க வேண்டியது வரும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரவிருக்கின்ற மஸீஹை நபி என்று கூறியிருக்கிறார்கள். எனவே, எவ்வித அச்சமும், தாழ்வு மனப்பான்மையும் இன்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்தை அஹ்மதிகள் எடுத்துரைக்க வேண்டும். ஏனென்றால், அஹ்மதிகளைப் பற்றி இந்த நற்செய்தி உள்ளது. அதாவது அஹ்மதிகள் உண்மையைக் கொண்டு எதிரிகளின் வாயை அடைப்பார்கள். இந்த நற்செய்தி இருக்கும்போது உங்களுக்கு என்ன கஷ்டம்?

இந்த அதிகாரத்தின் ஆறாவது வசனம் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் ஆகும். இதன் பொருள், ஆறாவது ஆயிரம் ஆண்டில் நிலவும் இருள் வானத்திலிருந்து உதவிகளை எதிர்பார்க்கும். மேலும் நல்ல உள்ளங்கள் இறைவனிடம் நேர்வழியை வேண்டும். அதாவது மஸீஹே மவ்வூதை தேடும்.

ஆறாவது ஆயிரம் ஆண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலகட்டமாகும். மேலும் இக்காலகட்டத்தில் நேர்வழி காட்டுபவரை தேடுகிறார்கள். ஆனால், வானமும் பூமியும் அவரது உண்மையை மகத்துவமிக்க முறையில் வெளிப்படுத்தியிருந்தும் அவரை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறு ஏற்றுக்கொள்ளாமல் இவர்களுடைய உள்ளம் நல்ல உள்ளம் இல்லை என்பதை இவர்கள் வெளிப்படுத்துகின்றனர். இவர்களை மகிழ்விப்பதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையை ஏற்றுக்கொள்கின்ற பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்கிய பிறகு, அந்த உண்மையை மறுத்து விடுவோமா?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குத்பா இல்ஹாமிய்யாவில் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

இறைவன் மீது ஆணையாக. திருக்குர்ஆன் எல்லா கருத்து வேறுபாடுகளையும் களையக் கூடியதாகும். அதில் காத்தமுல் குலஃபா முஹம்மதிய்ய தொடருக்கு மூஸாவின் தொடரிலிருந்து வருவார் என்று

எங்குமே எழுதப்படவில்லை. அவரை நீங்கள் பின்பற்றாமல் இருக்க வேறு எந்த ஆதாரமும் இல்லை. மாறாக, உங்களுக்கு இதற்கு நேர் எதிராக ஆதாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. உங்களது நாவால் எதையும் பேசாதீர்கள். அவ்வாறு பேசிய சொற்கள் இருட்டில் ஏவப்பட்ட அம்புகள் ஆகும். மேலும் இதில் கூறப்பட்டுள்ள வாக்குறுதி உண்மையான வாக்குறுதியாகும். சூரா ஃபாத்திஹாவிலும் இதையே அல்லாஹ் கூறியுள்ளான்.

**ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம்** என்ற வசனத்தை தொழுகையில் ஓதுகிறார்கள். இருந்தும் எதாவது சாக்குப்போக்கு கூறுகிறார்கள். மேலும் அல்லாஹ்வின் சான்றை புறக்கணிக்காதீர்கள். நீங்கள் இறைவனின் கூற்றை உங்கள் பாதங்களுக்கு கீழ் போட்டு மிதிக்காதீர்கள். உங்களுக்கு என்ன நேர்ந்தது?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கிஷ்தி நூஹ் என்ற நூலில் **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம்** என்ற வசனத்திற்கு மிக அழகான விளக்கம் கூறி இந்த வசனத்தில் முஹம்மதிய உம்மத்திலிருந்தே மஸீஹ் மவ்வூது வருவார் என்று நற்செய்தி கூறப்பட்டுள்ளது என்று விளக்கம் எழுதுகிறார்கள்.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

ஈடேற்றம் பெற்றவர் யார்? இறைவன் உண்மையாளர். முஹம்மத் (ஸல்) அவர்கள் எல்லா படைப்பினத்திற்கும் சிபாரிசு செய்பவர் ஆவார்கள். மேலும் வானத்தின் கீழ் அவர்களைப் போன்று வேறு நபி யாரும் இல்லை. மேலும் திருக்குர்ஆனைப் போன்று வேறு வேத நூல் இல்லை. யாரும் நிரந்தரமாக உயிரோடு இருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்பவில்லை. ஆனால் அந்த நபி எப்போதும் உயிரோடு இருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்பினான். அவர் நிரந்தரமாக வாழ்வதற்கு அல்லாஹ் அன்னாரது ஆன்மீக பயனையும் அருளையும் கியாமத் நாள் வரை நீட்டித்துள்ளான். மேலும் இறுதியில் அந்த நபியின் அருளை முழுமைப்படுத்துவதற்கு அல்லாஹ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். மேலும் அன்னாரது வருகை இஸ்லாத்திற்கு மிகவும் தேவை. ஏனென்றால், ஒரு ஆன்மீக மஸீஹ் இந்த உம்மத்திற்கு தரப்படாதது வரை இந்த உலகம் அழியாது. மேலும் மூஸாவின் தொடரில் வந்த நபியைப் போன்று வர வேண்டும்.

**இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம்** என்ற வசனத்தில் அல்லாஹ் இதன் பக்கமே கவனமூட்டியுள்ளான். இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எல்லா மார்க்கத்தை விடவும் எல்லா ரஸூலை விடவும் சிறந்தவர்களாவார்கள். இனி கியாமத் வரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஷரீஅத் மற்றும் ஆன்மீக பலன்தான் இருக்கும். மேலும் மஸீஹே மவ்வூது அவர்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்திலிருந்து தான் வர வேண்டும். மேலும் மஹ்தியும் இந்த உம்மத்திலிருந்து தான் வர வேண்டும். இருவரும் வெவ்வேறானவர்கள் அல்ல. ஒரு ஹதீஸின் அடிப்படையில் இருவரும் ஒருவரே என்பது விளங்குகிறது. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் என்பதில் இறைவன் இதன் பக்கமும் கவனமூட்டியுள்ளான். அதாவது வந்திருக்கின்ற இமாம் மஹ்தியை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஸரூரத்துல் இமாம் என்ற நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

பௌதீக வாழ்வில் நீங்கள் ஒரு மன்னருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுவது போன்று ஆன்மீகத்தின் அதே கட்டளையைத்தான் திருக்குர்ஆன் பிரதிபலிக்கிறது. **இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம்** என்ற துஆவில் அல்லாஹ் இதன் பக்கம் நான் கவனமூட்டியுள்ளான். பௌதீக வாழ்வில் ஒரு அரசாங்கம் ஒன்று தேவைப்படுகிறது. ஒரு தலைமை தேவைப்படுகிறது. அவ்வாறே ஆன்மீக அமைப்பும் உள்ளது. இதற்கும் ஒரு வரையறை உண்டு. அந்த ஆன்மீக அமைப்பை வழிநடத்துவதற்காக இந்த துஆவை அல்லாஹ் கற்றுத் தந்துள்ளான். எந்த

உயிரினமும், அல்லாஹ்வின் அருளிலிருந்து வெளியில் இல்லை. இறைவன் ஒரு தலைமையை பின்பற்றுவதற்காக இந்த துஆவை கற்றுத் தந்துள்ளான். எனவே இந்த வசனத்திற்கு பொருள், எவர் மீது முழுமையான இறைவனுடைய அருள்மழை பொழிகின்றதோ அவர்களை அடையாளம் காட்டுவாயாக. மேலும் அவர்களை ஏற்றுக் கொள்கின்ற நற்பாக்கியத்தை அவர்களுக்கு வழங்குவாயாக. இந்த துஆ விலங்கினங்களுக்கு கிடையாது. இது மனிதனுக்கு கற்றுத் தரப்பட்ட துஆ ஆகும். எனவே, மனிதனின் மீது இறங்கிய அருட்கொடைகள் தனது முழு வளர்ச்சியையும் அடைந்தது. மேலும் அது முழுமை பெற்றது. அவ்வாறு முழுமையாக அருட்கொடையை பெற்றவர்களின் வழியில் நடப்பதற்கு எவர்களுக்கு பாக்கியம் வழங்குவாயாக. எனவே, காலத்தின் இமாமின் பின் நீங்கள் செல்லுங்கள் என்பது இந்த வசனத்தின் கருத்து ஆகும்.

இங்கு **இமாமுஸ்ஸமான்** – காலத்தின் இமாம் என்ற சொல் மிகவும் போற்றத்தக்கதாகும். அதாவது இந்த கொல்லில் நபி, ரஸூல், முஹத்தஸ், முஜத்தித் அனைவரும் அடங்குவர். ஆனால் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும், படைப்பினத்திற்கு நேர்வழி காட்டுவதற்காகவும் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்படவில்லை என்றால், மேலும் அவருக்கு அதிசயங்களும் வழங்கப்படவில்லை என்றால் அவர் வலியுல்லாஹ்வாக இருந்தாலும் சரி இமாமுஸ்ஸமான் ஆக முடியாது. ஆக அல்லாஹ் எவருக்கு இமாமுஸ்ஸமான் என்று பெயர் வைக்கின்றானோ அவரே இமாமுஸ் ஸமான் – காலத்தின் இமாம் ஆவார். இதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒன்றை விளக்கிவிட்டார்கள். அதாவது வலி ஆவது இபாபத்தின் தர்ஜா ஆகாது. நன்மையை அதிகம் செய்வதன் மூலம் அல்லாஹ்வை நெருங்கினாலும் அது இமாமத்தின் பதவி ஆகாது. காலத்தின் கலீஃபா என்ற தகுதியை அல்லாஹ் எவருக்கு வழங்குகின்றானோ அவர்தான் காலத்தின் இமாம் ஆவார். எனவே இக்காலத்தில் அல்லாஹ் மஸீஹ் மவ்வூத் ஆகவும், மஹ்தியாகவும் அனுப்பியவர்தான் காலத்தின் இமாம் ஆவார்.

வாதம் செய்கின்ற ஒருவர் வாதம் செய்து விட்டால் மட்டும் போதுமானது அல்ல. மாறாக, அதோடு வானம் மற்றும் பூமியின் அடையாளங்கள் உள்ளன. எனவே இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆ முஸ்லிம்களுக்கு மட்டும் நேர்வழி காட்டுவதாக இல்லை. மாறாக, கிறித்தவராக இருந்தாலும் சரி, இந்துவாக இருந்தாலும் சரி, யூதராக இருந்தாலும் சரி, நல்லெண்ணத்துடன் துஆ செய்தால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று அதாவது நான் முஸ்லிம் அல்லாத பலரிடம் இந்த துஆவை செய்யுமாறு கூறியிருக்கிறேன். அவர்களுக்கு இதன் மூலம் நேர்வழியும் கிடைத்திருக்கிறது. அவர்கள் கனவு கண்டு அஹ்மதிய்யத்தை ஏற்றுள்ளார்கள்.

ஆக, முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அல்லாஹ் இந்த துஆவின் மூலம் நேர்வழி காட்டுகிறான் என்றால் முஸ்லிம்களுக்கு ஏன் நேர்வழி காட்டமாட்டான்? இவர்களுடைய எண்ணம் தூய்மையாக இல்லை என தெரிகிறது. பெரிய பெரிய ஆலிம்கள் வெளிப்படையாக தொழுகையை நிறைவேற்றுபவர்கள். ஆனால், நேர்வழி இல்லை. எனவே அல்லாஹ்வின் நேர்வழியைப் பெற வேண்டும் என்றால், அவன் பக்கம் நல்லெண்ணத்துடனும் தூய மனதுடனும் குனிவது மிகவும் அவசியமானதாகும்.

**வல்லதீன ஜாஹதூ ஃபீனா னஹ்தியன்னஹூம் சுபுலனா** (29:70) நம்மை சந்திக்க முயற்சி செய்பவர்களுக்கு நம் பக்கம் வருவதற்கான வாய்ப்பை கண்டிப்பாக நாம் வழங்குவோம் என்று அல்லாஹ் கூறுகிறான்.

கடந்த சில நாட்களுக்கு முன் MTA-வில் இமாம் ராஷித் சாஹிப் மற்றும் பாசித் சாஹிப் ஆகியோர் Persecution நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு நாள் அமெரிக்காவிலிருந்து அஹ்மதி அல்லாத ஒரு ஆலிம் இங்கு வந்திருந்தார். அவர் MTA-க்கு போன் செய்தார். நான் உங்களது சில நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கிறேன். அதில் நீங்கள் சில ஹதீஸ்களை தவறாகப் படித்திருக்கிறீர்கள் என்றும் இன்னும் சிலவற்றைக் கூறினார். மேலும் நான் உங்களிடம் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன் என்று

கூறினார். உடனே நமது ஒரு சகோதரர் அவரிடம் சென்று அவர் கூற விரும்பிய விஷயங்களை பதிவு செய்து வந்தார். அவரது உரைகளிலிருந்து அஹ்மதிய்யத்திற்கு விரோதமான விஷயங்கள் வெளிப்பட்டன. அதற்காக விளக்கமான பதில் அதே நிகழ்ச்சியின் மூலம் கொடுக்கப்படும் இன்ஷா அல்லாஹ். ஆனால் அவர் கூறிய ஒரு விஷயம் பொதுவானதாகும். பொதுவாக அஹ்மதி அல்லாதவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு ஆன்மீக ரீதியில் ரஃபஅ கிடைத்தது என்று அஹ்மதிகளாகிய நாம் கூறுகிறோம். அதற்கு இது பொருள் அல்ல. மாறாக, உடலோடு உயர்த்துதல் ஆகும் என்று கூறினார். இது எல்லா அஹ்மதி அல்லாதவர்களும் கூறுகின்ற ஒரு பொதுவான விஷயமாகும். ஆனால், அவர் கூறியதில் ஒன்று மட்டும் எனக்கு மிகவும் புதிதாக இருந்தது. நீங்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று கூறுவதன் காரணம் அஹ்மதிய்யத்தின் வாழ்வு இதில்தான் இருக்கிறது என்பதற்காக என்று கூறினார். இவ்வாறு அவர் தனது எண்ணத்தை வெளிப்படுத்தினார். அவர் ஜமாஅத்தின் நூல்களை நன்கு படித்தவர் ஆவார். இதை அவரே கூறவும் செய்கின்றார். ஓரளவு படித்திருக்கின்றார். ஆனால், நுட்பமாக பார்த்தால் இதில் அஹ்மதிய்யத்தின் வாழ்க்கை இல்லை. மாறாக, ஈசாவின் மரணம் உண்மையில் இஸ்லாத்தின் வாழ்க்கையாகும் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஈஸா மரணமடைந்தால் தான் இஸ்லாம் உயிர் பெறும். ஏனென்றால், கிறித்தவர்களிடம் இந்த ஒரு ஆயுதம்தான் இருக்கிறது. அதை வைத்து ஒன்றும் அறியாத முஸ்லிம்களிடம் தங்களுக்கு ஆதரவாக வைக்கிறார்கள். முஸ்லிம் ஆலிம்கள் கூட இந்த விஷயத்தை பேசுவதை தவிர்க்கிறார்கள். இருந்தாலும் மேற்கத்திய நாடுகளில் வசிக்கும் நன்றாக படித்த ஆலிம்கள் கூட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் உயிரோடு இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

நாம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபித்து இஸ்லாத்தை உயிருள்ள மார்க்கமாக மதிக்கிறோம். மேலும் முஹம்மதிய மஸீஹை மூஸாவின் மஸீஹிற்கு ஒப்பாக எடுத்துரைக்கிறோம். இதன் மூலம் இஸ்லாம் உயிருள்ள மார்க்கம் என்பது நிரூபணம் ஆகிறது. ஆனால் அஹ்மதிய்யத் உயிருடன் வாழ்வது ஹஸ்ரத் ஈஸாவின் மரணத்தை நம்பி இருக்கிறது என்று இவர்கள் கூறுகின்றனர். ஆனால் அஹ்மதிய்யத் வாழ்வது உண்மையில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியாகும் என்பது நமது வாதமாகும். நாம் செய்வது அனைத்தும் இஸ்லாத்திற்காகவே செய்கிறோம். மேலும் அஹ்மதிய்யத் உண்மையான இஸ்லாமாகும்.

அஹ்மதிய்யத்தின் தப்லீக் காரணமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்ற கிறித்தவர்கள், ஈஸா நபியின் மரணம் நிரூபிக்கப்பட்ட பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. இஸ்லாத்தின் வாழ்வு இவர்களுக்கு தெரிய வருகிறது. மேலும் இவர்களுக்கு தங்களது மார்க்கத்தின் குறைகள் தெரிய வருகிறது.

எனவே, நீங்கள் இறைவனிடம் பணிவோடு துஆ செய்யுங்கள். இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை அதிகம் வேண்டுங்கள். இவர்களுடைய உள்ளம் தூய்மையாக இருக்கும் என்றால் அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழி காட்டுவான். இஸ்லாத்தோடு உணமையிலேயே நேசம் இருந்தால் மஸீஹ் மற்றும் மஹ்தியோடு இணைந்திருப்பதன் மூலமே வெற்றிகள் உண்டு என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இது இல்லாமல் வேறு வழியே இல்லை. மேலும் இது தவிர எந்த முயற்சியை நீங்கள் செய்தாலும் அது தோல்வியே அடையும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனின் கட்டளையுடன் இந்த பிரகடனம் செய்கின்றார்கள். மேலும் 120 வருடங்களாக இது உண்மை என்பதை நாம் பார்த்து வருகிறோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனக்கு இந்த திருக்குர்ஆன் வசனம் இறங்கி ஏறக்குறைய 20 வருடங்கள் கழிந்து விட்டன. அந்த வசனம் இதுவாகும். **ஹுவல்லதீ அர்ஸல ரஸுலஹு பில் ஹுதா வதீனில் ஹக்கி. லியுழ்ஹிரஹு**

**அலத்தீனி குல்லிஹி**. இந்த இல்ஹாமின் பொருள் எனக்கு இவ்வாறு கற்பிக்கப்பட்டது. இறைவன் எனது கைகளால் இஸ்லாத்தை எல்லா மார்க்கங்களுக்கும் சிறந்த மார்க்கம் என்பதை நிரூபிப்பதற்காக என்னை அனுப்பியுள்ளான்.

இது திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள முன்னறிவிப்பாகும். இதை ஆலிம்களும், மார்க்க ஆராய்ச்சியாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த முன்னறிவிப்பு மஸீஹ் மவ்வூதின் காலத்தில் நிறைவடையும். எனக்கு முன் பல வலிமார்கள் மற்றும் சான்றோர்கள் வந்துள்ளனர். யாரும் தன்னை தன்னை இந்த முன்னறிவிப்பிற்கு உகந்ததாக கூறவில்லை. மேலும் மேற்கூறப்பட்ட வசனம் அவர்களுக்கு இல்ஹாம் வந்ததாகவும் யாரும் கூறவில்லை. ஆனால் எனது காலகட்டம் வந்த பிறகு எனக்கு இந்த இல்ஹாம் வந்தது. மேலும் இந்த வசனத்திற்கு நீர் தான் பொருந்துகிறீர் என்றும் உமது கைகளாலும், உமது காலத்திலும் இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்புத்தன்மை வெளிப்பட வேண்டும் என்று எனக்கு கூறப்பட்டுள்ளது.

**மேலும் கூறுகின்றார்கள்:**

தனது நல்லடியாரை அனுப்பிய அந்த இறைவன் இரண்டு விஷயங்களோடு அனுப்பினான். ஒன்று அவரை ஹிதாயத் என்ற அருட்கொடையை வழங்கினான். அதாவது தனது வழியை அடையாளம் கண்டுகொள்கின்ற கண்களை அவருக்கு வழங்கியுள்ளான். அந்த நேர்வழியை பிறருக்குக் காட்டுவதற்காக இதை வழங்கினாலும் மேலும் இல்மே லதுன்னி – அதாவது மனித முயற்சி ஏதுமின்றி அல்லாஹ் தனது அடியாருக்கு வழங்குகின்ற ஞானத்தை அவருக்கு வழங்கியுள்ளான். மேலும் கஷ்ஃபில் மற்றும் இல்ஹாமை கொண்டு அவரது உள்ளத்தை தூய்மையாக்கியுள்ளான். இவ்வாறு இறை ஞானம், இறை நேசம், இறை வணக்கம் இதைக் கொண்டு அவரது கடமையை செய்வதற்கு அல்லாஹ்வே அவருக்கு உதவி புரிந்துள்ளான். எனவேதான் அவருக்கு மஹ்தி என்று பெயர் வைத்துள்ளான். இரண்டாவது உண்மை மார்க்கத்தைக் கொண்டு ஆன்மீக நோயாளிகளை குணப்படுத்துவதாகும். அதாவது ஷரீஅத்தின் அனைத்து கருத்து வேறுபாடுகளையும் அகற்றி உள்ளங்களிலிருந்து சந்தேகங்களை நீக்குவதாகும். இதன் காரணமாக அவருக்கு ஈஸா என்று பெயர் வைத்துள்ளான். அதாவது நோயாளிகளை குணமளிப்பவர். ஆக இந்த வசனத்தில் காணப்படும் i) பில் ஹுதா ii) தீனுல் ஹக் ஆகிய இரண்டு சொற்களுள் முதல் சொல் தெரிவிப்பது என்னவெனில் வருகின்ற இறையடியார் மஹ்தியாவார். மேலும் அவர் இறைவனின் கைகளால் தூய்மையாக்கப்பட்டவர் ஆவார். மேலும் இறைவனே அவருக்கு ஆசிரியர் ஆவார்.

இரண்டாவது சொல் **தீனில் ஹக்** தெரிவிப்பது என்னவெனில் வருபவர் ஈஸா ஆவார் என்பதாகும். ஆன்மீக நோயாளிகளுக்கு, அவர்களின் நோயை அவர்களிடம் தெரிவித்து, அதை குணமாக்குவதற்கான ஞானம் ஈஸாவுக்கு கொடுக்கப்படும். ஏனென்றால், அவர் இஸ்லாத்தின் மேன்மையை அனைத்து மார்க்கத்தின் மீதும் சிறப்பானதாக நிரூபிக்கும் பணியை செய்ய வேண்டும். இதற்காக அனைத்து மார்க்கத்தின் ஞானமும் அவருக்கு கொடுக்கப்படும். அதாவது பிற மார்க்கங்களின் சிறப்புகளும், குறைகளும் அவருக்கு கற்றுக் கொடுக்கப்படும். மேலும் உறுதியான ஆதாரங்களைக் கொண்டு எதிரிகளின் கேள்விகளுக்கு பதில் கொடுக்கும் திறன் அவருக்கு கொடுக்கப்படும். இவ்வனைத்தும் அவருக்கு கொடுக்கப்படும் அற்புதங்கள் ஆகும். மேலும் இதன் மூலம் எல்லா மார்க்கங்களின் குறைகளையும் மக்களுக்கு எடுத்துரைத்து எல்லா ரீதியிலும் இஸ்லாத்தின் சிறப்பை நிரூபிக்க வேண்டும். மேலும் எல்லா ரீதியிலும் ஆன்மீக நோயிலிருந்து குணம் வழங்குவார். எனவே வருகின்ற சீர்திருத்தவாதி **காத்தமுல் முஸ்லிஹீன்** அவருக்கு இரண்டு விஷயங்கள் வழங்கப்படும். ஒன்று நேர்வழியின் ஞானம். அது மஹ்தி என்ற பெயரிலிருந்து நமக்கு புரிகிறது. இது முஹம்மதின் ஒரு நிழலாகும். உம்மியாக இருந்தும் கூட ஞானம் வழங்கப்பட்டது. இது மஹ்தி என்பதை குறிக்கிறது. இரண்டாவது போதனை தீனுல் ஹக்காகும். இது ஆன்மாவை நோயிலிருந்து குணமளிப்பதைக் குறிக்கிறது. ஆன்மீக நோயை குணப்படுத்தவும் ஆதாரத்தை முழுமைப்படுத்தவும் இறைவனிடமிருந்து சக்தி கிடைக்கிறது. மேலும் நேர்வழி பெரும் பண்பு இறைவன் புறமிருந்து கிடைக்கிறது என்பதை குறிக்கிறது. மேலும் தீனுல் ஹக்கின் ஞானத்தைப் பெரும் பண்பு ஆன்மாவின் நிம்மதி மற்றும் ஆன்மீக நோயில் குணமடைதல்

இதை குறிக்கிறது. அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் உயர் தகுதி இதுவாகும். இக்காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காவும் நேர்வழியைக் காட்டுவதற்கும் இறைவனால் அனுப்பப்பட்டவர் ஆவார். ஹேும் இதன் மூலம் உலகத்திற்கு இஸ்லாத்தின் பிரகாசமான போதனை புரிய வேண்டும்.

அல்லாஹ் உலகிற்கு இந்த மஹ்தி மற்றும் மஸீஹினை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்குவானாக மேலும் நாமும், நேர்வழிகாட்டுகின்ற இறைவனால் அனுப்பப்பட்ட மஹ்தியின் போதனையின்படி நடந்தவாறு அதில் நிலைத்திருக்கவும், ஏமாற்றம் ஏற்படாமல் இருக்கவும், இறைவனின் விருப்பத்தின் பக்கம் நம்மை அழைத்துச் செல்கின்ற வழியில் செல்லவும் அல்லாஹ் நமக்கு நற்பாக்கியம் வழங்குவானாக.

**ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து ஜனாஸாவிற்கான அறிவிப்பு செய்தார்கள்:**

1) காதமுன் நிஸா சாஹிபா. இவர் மர்ஹூம் மவ்லவி முஹம்மது ஷஃபீ ஹஸன் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார். 78 வயதில் இவர்கள் இறந்து விட்டார்கள் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

2) சலீமா பேகம் சாஹிபா. இவர் மர்ஹூம் டாக்டர் அப்துர் ரஹ்மான் சித்தீக் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார். 88 வயதில் வஃபாத் ஆனார்கள். இவர்களுக்கு ஒரே மகன் டாக்டர் அப்துல் மன்னான் சித்திகி சாஹிப் ஆவார். இவர்களை ஷஹீதாக்கி விட்டனர். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

3) அஃபீலா சாஹிபா. இவர் சபூதி அஸீஸ் அஹ்மத் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார். இவர் 65 வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

4) மிர்ஸா முஹம்மத் அக்ரம் சாஹிப். இவர் மிர்ஸா முஹம்மத் அஸ்லம் சாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். அன்ஸாருல்லாஹிவில் இப்போது தான் இணைந்துள்ள வாலிப வயதையுடையவர். இவர் தமது கடையில் இருந்தார். முகம் தெரியாதவர்கள் துப்பாக்கியால் சுட்டார்கள். 23 குண்டுகள் இவர் மீது பாய்ந்து, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள். இவ்வாறு இவர்கள் ஹீத் ஆனார்கள். ஜமாஅத் பணிகளில் மிகவும் ஆர்வமுடையவர்கள் ஆவார். நல்லொழுக்க முடையவர்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 06.02.2009

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**